සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்பகைத்தொழில்மற்றும்சமூகவலுவூட்டல்அமைச்சு
MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/05/MF/02/01/சுற்றுநிருபம்
ඔබේ අංකය / உமது இல / Your No: ………
දිනය / திகதி / Date: 2019.02.28

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம் - 2019/01

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி /
வங்கிச்சங்க முகாமையாளர்களுக்கும்

**2019 மார்ச் 08 ஆம் திகதிய சர்வதேச மகளீர் தினத்துடன் இணைந்து திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல் - 2019**

**அறிமுகம் -**

2019 மார்ச் 08 ஆம் திகதிய சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளினூடாக திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல்.

தைரியத் தாயின் / இல்லத்தரசிகள் மனை அலகின் நிர்வாகத்தினூடாக சமூகத்திற்கு சிக்கனம் தொடர்பான முன்மாதிரியினை கற்றுக்கொடுத்துள்ளனர். அதனை மேலும் வலுவாக்கி பணம் சேமிக்கும் பழக்கத்தினை பலப்படுத்தி முன்னெடுத்துச் செல்லவும் அவர்களின் பொருளாதார நிலைமையினை ஸ்திரப்படுத்தவும் அதன் நன்மைகளை நாட்டின் அபிவிருத்திக்கு ஈடுபடுத்தவும் இவ்வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் குறிக்கோளை அடைந்து கொள்ளும் பொருட்டு தற்போது சமுர்த்தி வங்கிகளில் இணைந்துள்ள பெண்களும் இதுவரை இணைந்து கொள்ளாத பெண்களும் திரியமாதா சேமிப்புக் கணக்கிற்கு பணத்தை சேமித்துக் கொள்வதற்கும், புதிய திரியமாதா கணக்கினை ஆரம்பித்துச் செயற்படுத்துவதற்கும் இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

**02. சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் இலக்கு**

2.1 நாடுதழுவிய ரீதியில் அமைந்துள்ள 1073 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளும் இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல் வேண்டும். இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் திரியமாதா சேமிப்பு வைப்புக் கணக்குகளிற்கு மாத்திரம் சேமிப்புக்களை சேகரிப்பதனூடாக தேசிய மட்டத்தில் 300மில்லியன் ரூபாவினை தாண்டிய தொகையினை சேமிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

2.2 ஒட்டு மொத்தமாக குறித்த இலக்கினை அடைந்து கொள்வதற்கு சகல சமுர்த்தி வங்கிகளும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அந்த வகையில் ஒரு சமுர்த்தி வங்கி குறைந்தது ரூபா 280,000/= வை வைப்பாக சேகரிக்க திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

2.3 நாடு பூராகவும் 20000 திரியமாதா சேமிப்புக் கணக்குகளை புதிதாக ஆரம்பித்துக் கொள்வதற்கு இலக்கிடப்பட்டுள்ளதுடன் இதுவரை சமுர்த்தி வங்கிகளில் இணைந்து கொள்ளாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பெண்கள் உட்பட சகல பெண்களையும் உள்ளடக்கிய விதத்தில் இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல் வேண்டும். இங்கு ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படைவ ங்கியும் புதிதாக குறைந்தது 20 திரியமாதா சேமிப்பு வைப்புக் கணக்குகளையாவது ஆரம்பிக்க இலக்கு வேலைத்திட்டத்தினை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் (நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

2.4 சமுர்த்தி வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கினை அடைந்துகொள்வதற்கு வங்கிகளின் அதிகாரப்பிரதேசத்தினுள் காணப்படும் சமுதாய அடிப்படை மட்ட அமைப்புகளுக்கு இலக்கினை பங்கிட்டு வழங்கி தமது இலக்கினை அடைந்து கொள்வதற்கான சேமிப்பு மேம்பாட்டு யுக்திகள் தொடர்பாக வங்கி முகாமையாளரினால் தெளியூட்டப்படல் வேண்டும்.

2.5 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் இலக்கினை ஒன்று சேர்த்து சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் இலக்கு தீர்மானிக்கப்படல் வேண்டும். (சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச்சங்கத்தின் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து வங்கிகளினதும் இலக்குகளை ஒன்று சேர்த்து வங்கிச் சங்கத்தின் இலக்கு தீர்மானிக்கப்படும்.)

### 03. மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கால எல்லை

**2019 மார்ச் 08 ஆம் திகதியிலிருந்து 22** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை முழுமையாக செயற்படுத்தி இலக்கினை அடைந்துகொள்ள முடியும்.

### 04. பிரச்சார நடவடிக்கைகளும் அன்பளிப்புக்களை வழங்கலும்

4.1 சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பில் மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் கள உத்தியோகத்தர்கள் மற்றும் மக்கள் அமைப்புக்களின் தலைவர்கள் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் பரவலான முறையில் விழிப்பூட்டுவதற்கு உத்தேசிக்கின்ற வங்கிகள் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகிக்க முடியும். அதன் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியொன்றிலிருந்து உயர்ந்தபட்சம் ரூபா 3000/= தொகையினை செலவு செய்ய முடியும். இதனை செலவுக் கணக்கு – வங்கி மேம்பாட்டு நடவடிக்கை கணக்கில் பற்று வைத்து பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

4.2 தமது அதிகார பிரதேசத்தின் சகல வங்கிகளுக்கான துண்டுப் பிரசுரங்கள் அச்சிடுதல் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் மூலம் ஒருங்கிணைப்புச் செய்து மேற்கொள்ளப்படல் வேண்டும். துண்டுப்பிரசுர அச்சிடலானது அத்தியாவசியமான ஒரு விடயமாக அமையாது.

4.3 இச் சேமிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவேயுள்ள திரியமாதா சேமிப்புக் கணக்கில் அல்லது புதிதாக ஆரம்பிக்கின்ற திரியமாதா கணக்குகளின் பொருட்டு சேமிக்கின்ற தொகைக்கு கணக்குடையோருக்கு ஞாபகார்த்த அன்பளிப்பு ஒன்றினை வழங்கமுடியும். அந்த அன்பளிப்பின் பொருட்டு வங்கியானது உயர்ந்தபட்சமாக சேகரிக்கின்ற சேமிப்பு தொகையிலிருந்து 4%க்கு மேற்படாத தொகையினை வங்கி நிதியத்திலிருந்து செலவு செய்ய அனுமதியுண்டு. இங்கு ஒவ்வொரு கணக்குடையோனும் மேம்பாட்டு வாரத்திற்குள் வைப்புச் செய்கின்ற தொகைக்குப் பொருத்தமான மற்றும் வித்தியாசமான அன்பளிப்பு ஒன்றினை வழங்குவது தொடர்பில் முகாமையாளர் உட்பட கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்தல் வேண்டும். இதனூடாக எச்சந்தர்ப்பத்திலும் அந்தந்தக் கணக்குடையோன் வைப்புச் செய்கின்ற தொகையில் 4% த்தையோ அல்லது அதிலும் கூடிய பெறுமதியுள்ள ஞாபகார்த்த அன்பளிப்பினை வழங்கலாகாது

4.4 2019 மார்ச் 08ம் திகதியிலிருந்து 22ம் திகதி வரை திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் வைப்புச் செய்கின்ற தொகையினை வங்கியில் ஆகக் குறைந்தது 12 மாதாங்களாவது வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். (வைப்புச் செய்த திகதியிலிருந்து) அன்பளிப்புக்களை எதிர்பார்த்து வைப்புக்களை மேற்கொண்டு குறுகிய காலத்திற்குள் பணத்தினை மீளப் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற கணக்குடையோர்கள் இருப்பதாக அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அந்த நிலமைகளை தவிர்த்துக் கெள்வதற்கே இவ் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இவை தொடர்பில் வங்கிப் பணியாளர்கள் விசேட கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

4.5 அன்பளிப்புப் பொருட்களை தெரிவுசெய்தல் மற்றும் கொள்வனவு செய்கின்ற சந்தர்ப்பங்களில் நிதி வெளிப்படைத்தன்மை பேணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த அன்பளிப்புப் பொருட்களை தெரிவு செய்யும்போது வங்கிக்கான பிரச்சார ரீதியான ஒத்துழைப்பும் நற்பெயரும் கிடைக்கக் கூடியவாறுமேற்கொள்ளல் வேண்டும்.

4.6 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் பொருட்டு செயற்படுத்தப்படுகின்ற மதிப்பீட்டு வேலைத் திட்டங்கள் மற்றும் தரப்படுத்தல்களின் போது (Grading) இவ்வாறான சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்களில் இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு எடுக்கின்ற முயற்சிகள் தொடர்பில் கவனஞ்செலுத்தப்படும் என்பதையும் தெரியப்படுத்துகின்றேன்.

4.7 இவ் வேலைத்திட்டத்தின் கீழ் கணக்குடையோர் அன்பளிப்புப் பொருளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அங்கத்தவர் சேமிப்புக் கணக்கில் உள்ள வைப்புத் தொகையினை திரியமாதா கணக்கிற்கு மாற்றம் செய்வதற்கு அல்லது இலக்கினை அடையும் பொருட்டு வங்கிக் கடன்களை வழங்கி அத்தொகையினை மீளவும் திரியமாதா சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்வதனை முற்றாக தவிர்த்துக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**05. முன்னேற்ற அறிக்கைகளை வழங்குதல்.**

6.1 வங்கிகள் இணைப்பு 01 இல் குறிப்பிட்டப்பட்டுள்ள படிவத்தினை முறையாகப் பூர்த்தி செய்து முன்னேற்றத்தினை **2019.04.02** ம் திகதிக்கு முன்னர் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்திற்கு வழங்குதல் வேண்டும்.

6.2 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் பெற்றுக் கொண்ட முன்னேற்றத்தினை **2019.04.10**ம் திகதிக்கு முன்னர் இணைப்பு 02 இன் பிரகாரம் தயாரித்து சமுர்த்தி மாவட்ட பணிப்பாளருக்கு வழங்குதல் வேண்டும்.

06.3 மாவட்ட சமுர்த்தி பிரிவு **2019.04.18** ம் திகதிக்கு முன்னர் சகல சமுதாய அடிப்படை வங்கிகளினதும் முன்னேற்றத்தினை இணைப்பு 02ன் பிரகாரம் தயாரித்து பிரதான காரியாலய வங்கிப் பிரிவுக்கு bank@divineguma.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**நிமல் கொட்டவெலகெதர,**
பணிப்பாளர் நாயகம்.

**பிரதிகள்**:-

01. செயலாளர், ஆரம்ப கைத்தொழில் மற்றும் நலனோம்புகை அமைச்சு -தகவலுக்காக.
02. மாவட்ட செயலாளர்கள் - த.கூ.க.பொருட்டு.
03. சகல மாவட்ட பணிப்பாளர்கள - த.கூ.க.பொருட்டு.
04. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - த.கூ.க.பொருட்டு.
05 பிரதான கணக்காளர் - த.கூ.க.பொருட்டு.
06. சகல பிரதேச செயலாளர்கள் - த.கூ.க.பொருட்டு.
07. சகல நிறைவேற்று சபை தலைவர்கள் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச்சங்கம் - த.கூ.க.பொருட்டு.
08. சகல கட்டுப்பாட்டுசபை தலைவர்களுக்கும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி - த.கூ.க.பொருட்டு.

TRANSLATED BY I. ALIYAR